1971 டிசம்பர் 13]

(b) whether it is a fact that a protest meeting was held in the village on 23rd September 1971; and

(c) the steps taken to quieten the unrest?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அவ்வித முறையீடு வரவில்லை.

(இ) இல்லை. கம்யூனிஸ்ட் (வலதுசாரி) கட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று 23—9—1971-ல் நடைபெற்றது.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU K. T. K. THANGAMANI : I want to make some correction in the question. Clause (c) says ' steps taken to quicken the unrest '. What I wanted to say was to ' quieten ' the unrest.

சார், இந்தத் திருமங்கலம் தாலுக்காவில் இருக்கிற ஜமீன்தார்கள், ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகும், தங்களுக்குச் சொந்தமான பண்ணை நிலம் என்று ஏராளமான நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு யாருக்கும் தண்ணீர் விடாமல் ஏரி தண்ணீர் முழுவதையும் அவர்களே உபயோகித்து வருகிறார்கள்.

MR. SPEAKER : May I know whether it has been wrongly printed or the hon. Member has drafted it wrongly?

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்படி வைத்துக்கொண்டிருப்பது மாத்திரமல்லாமல் அந்த விவசாயிகளையும் பல விதமான இன்னல்களுக்கு ஆட்படுத்துகிறார்கள். அவர்களை பல விதத்திலும் கோர்ட்டுக்கு கொண்டு செல்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தொழிற் சங்கத்தில் இருக்கிற தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே தான் நான் கம்யூனிஸ்ட் கட்சி பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன் என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அன்று நடந்த கூட்டத்தில் சாதாரணமாக பல அரசியல் விவகாரங்களைப்பற்றி பேசப்பட்டதாகத்தான் அரசாங்கத்திற்கு தகவல் வந்திருக்கிறது. அங்கத்தினர் சொன்ன குற்றச்சாட்டுகள் எழுதி அனுப்பப்படுமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

MR. SPEAKER : So ' quieten ' has become ' quicken '.

பந்தலூரிலுள்ள ஆதிவாசிகளுக்கு நிலங்கள்

*** 317 வினா—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1971 டிசம்பர் 13]

(அ) நீலகிரி மாவட்டம், நெல்லியாளம் பஞ்சாயத்து பந்தலூரிலுள்ள ஆதிவாசிகளுக்கு விவசாய நிலங்கள் ஏதேனும் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்கள் அந்த ஒதுக்கப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்கின்றனர் ?

(உ) இல்லை எனில், காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 94 ஆதிவாசிகள்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. அ. பொம்மன் : பேரவைத் தலைவரவர்களே, ஆதிவாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை நிலச்சுவான்தார்கள் பறிமுதல் செய்து வருகிறார்கள். ஆகவே, அதை அரசு பரிசீலித்து. உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி எந்த இடத்தில் நடைபெறுகிறது என்று தெரிவித்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

பென்னலூர்ப்பேட்டைத் துணைவட்ட அலுவலகம்

*318 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்திற்கும் துணை பதிவாளர் அலுவலகத் திற்கும் கட்டடம் கட்ட ஊத்துக்கோட்டையில் நிலம் பெற வருவாய் வாரியம் பிரேரேபித்துள்ளது. இது அரசின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அப்படி வருவாய் வாரியம் அனுப்பியிருக்கும் செயற்குறிப்பை விரைவாக ஏற்று அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு, இருக்கின்ற நெறிசலில் ஊத்துக்கோட்டை துணை வட்டத்திற்கு உரிய அலுவலகத்திற்கு வாடகைக்குக் கூட இடம் கிடைக்காமல் இருக்கும் நிலைமையில், விரைவில் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.